**செய்தி வெளியீடு எண் : 58** **நாள் : 07.01.2025**

**மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பாக பல்வேறு விருதுகளை வழங்கிச் சிறப்பித்தார்**

பன்னூறு ஆண்டுகளாக வற்றாத படைப்புகளைக் கொண்டு, சீரிளமையோடு இலங்கி வரும் தமிழுக்கும், தமிழ்மொழி, பண்பாட்டு வளர்ச்சிக்கும் தொண்டாற்றி வரும் தமிழ்த்தாயின் திருத்தொண்டர்களுக்கும், அமைப்பிற்கும் தமிழ்நாடு அரசு பல்வேறு விருதுகளையும் சிறப்புகளையும் அளித்து, அவர்தம் தமிழ்த்தொண்டுக்குப் பெருமை செய்து வருகிறது.

அவ்வகையில் 2023ஆம் ஆண்டிற்கான தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக வழங்கப்பெறும் பல்வேறு விருதுகளுக்கு விருதாளர்கள் பின்வருமாறு தெரிவு செய்யப்பட்டனர்.

தமிழ்த்தாய் விருது – தென்காசித் திருவள்ளுவர் கழகம், கபிலர் விருது – கவிஞர் முத்தரசன் (வயது – 75, பெரம்பலூர் மாவட்டம்), உ.வே.சா விருது – முனைவர் ஆ.இராமநாதன் (வயது – 73, சென்னை மாவட்டம்), கம்பர் விருது – முனைவர் ம.பெ.சீனிவாசன் (வயது – 81, மதுரை மாவட்டம்), சொல்லின் செல்வர் விருது – முனைவர் இ.சா.பர்வீன் சுல்தானா (வயது – 53, சென்னை மாவட்டம்), உமறுப்புலவர் விருது – திரு.தா.சையது காதர் ஹீசைன் (வயது – 81, தஞ்சாவூர் மாவட்டம்), ஜி.யு.போப் விருது – முனைவர் வெ.முருகன் (வயது– 73, சென்னை மாவட்டம்), இளங்கோவடிகள் விருது – முனைவர் சிலம்பு நா.செல்வராசு (வயது – 68, புதுச்சேரி), அம்மா இலக்கிய விருது – முனைவர் சரளா இராசகோபாலன் (வயது – 81, சென்னை மாவட்டம்), சிங்காரவேலர் விருது – திரு.மு.சுப்பிரமணி (வயது – 56, தேனி மாவட்டம்), அயோத்திதாசப் பண்டிதர் விருது – முனைவர் மு.சச்சிதானந்தம் (வயது – 56, புதுச்சேரி), மறைமலையடிகளார் விருது – புலவர் இராமலிங்கம் (வயது – 92, சென்னை மாவட்டம்), அருட்பெருஞ்சோதி வள்ளலார் விருது – முனைவர் பா.அருள்செல்வி (வயது – 69, கடலூர் மாவட்டம்), காரைக்கால் அம்மையார் விருது – முனைவர் கி.மஞ்சுளா (வயது – 56, சென்னை மாவட்டம்), சி.பா.ஆதித்தனார் திங்களிதழ் விருது – சட்டக் கதிர் (ஆசிரியர் – முனைவர் வி.ஆர்.எஸ்.சம்பத்), முதலமைச்சர் கணினித் தமிழ் விருது – முனைவர் இரா.அகிலன் (வயது – 45, சென்னை மாவட்டம் – சங்க இலக்கிய உருபனியியல் பகுப்பான் மென்பொருள்)

**சிறந்த மொழிபெயர்ப்பாளர் 2023ஆம் ஆண்டுக்குரிய பத்து விருதாளர்கள்**

திருமதி பிரபா ஸ்ரீ தேவன் (வயது – 75, சென்னை மாவட்டம்), திரு.சீனி இராச கோபாலன் (வயது – 80, சென்னை மாவட்டம் ), திரு.இந்திரன் (எ) பி.ஜி.இராஜேந்திரன் (வயது –76, சென்னை மாவட்டம்), திருமதி அலமேலு கிருஷ்ணன் (வயது – 74, சென்னை மாவட்டம்), திரு.ருத்ர துளசி தாஸ் (எ) இளம் பாரதி (வயது – 90, சென்னை மாவட்டம்), பேராசிரியர் க.முத்துச்சாமி (வயது –79, சிவகங்கை மாவட்டம்), திரு.நடராஜன் முருகையன் (வயது – 83, சென்னை மவாட்டம்), திரு.நிர்மாலயா (எ) எஸ்.மணி (வயது – 62, நீலகிரி மாவட்டம்), திரு.இ.பா.சிந்தன் (வயது – 41, சென்னை மாவட்டம்), திருமதி கௌரி கிருபானந்தன் – (வயது – 67, சென்னை மாவட்டம்).

தெரிவு செய்யப்பட்ட விருதாளர்களுக்கு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் சென்னை, இராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள தமிழ்நாடு இசை மற்றும் கவின் கலைப் பல்கலைக்கழக அரங்கத்தில் இன்று (07.01.2025) விருதுகளை வழங்கிச் சிறப்பித்தார்.

தமிழ்த்தாய் விருது பெறும் தமிழ் அமைப்புக்கு ரூ.5.00 இலட்சம், கேடயம், தகுதியுரை, பொன்னாடையும் சி.பா.ஆதித்தனார் திங்களிதழ் விருது பெறும் விருதாளருக்கு ரூ.2.00 இலட்சம், கேடயம், தகுதியுரை, பொன்னாடையும் சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதினை பெறும் 10 விருதாளர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.2.00 இலட்சம், தகுதியுரை, பொன்னாடையும் ஏனைய விருதினை பெறும் விருதாளர்களுக்கு ரூ.2.00 இலட்சம், ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியரை, பொன்னாடையும் என 26 விருதாளர்களுக்கு விருதுத் தொகையாக மொத்தம் 55 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டன.

**மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் தமிழறிஞர்களுக்கு விருது வழங்கும் விழாவில் ஆற்றிய உரை**

தமிழர்களின் தனித்துவமிக்க நெறிகளையும், கொள்கைகளையும் கட்டிக்காத்து இன்று இந்திய திருநாட்டிற்கே முன்மாதிரியாக திகழும் திராவிட மாடல் அரசை பெருமையுடன் நடத்திக் கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தங்களது படைப்புகளாலும், சீர்மிகு பணிகளாலும், பாராட்டிப் பெருமைப்படுத்தும் விதமாக அவர்களுக்கு பல விருதுகளை தமிழ் வளர்ச்சி வழங்கி வருகிறது.

அவ்வகையில் தமிழ்த்தாய் விருதும், கபிலர் விருது, உ.வே.சா. விருது, கம்பர் விருது உள்ளிட்ட 16 விருதுகள் இன்றைக்கு வழங்கப்படவிருக்கிறது. தமிழறிஞர்களின் இடைவிடாத தொண்டிற்கும், அவர்களின் ஆற்றலுக்கும்,

பெருமைக்கும் அரசு வழங்கும் ஊக்கமே இந்த விருதுகள் என்பதை கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இத்தகைய தொண்டர்களின் அருமை தெரிந்தே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது ஆட்சியில் துறை தோறும் விருதுகளை அறிவித்து தகுதியுடையோரின் பணிகளை தரணி போற்றும் வகையில் அங்கீகாரம் பெற செய்கின்றார். அவர்களின் மகிழ்வில் தானும் மகிழ்ச்சி அடைகின்றார்.

தமிழுக்கும், தமிழருக்கும் வாழ்நாள் முழுவதும் தமது உழைப்பாலும், எழுத்தாலும், அறிவாலும், தொண்டாற்றலாலும், தமிழகத்தின் செதுக்கிய சிப்பியாக திகழ்ந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அய்யா அவர்கள் கூறியதைபோல், உலகில் ஓரிருவர் சரித்திரம் ஆகிறார்கள். ஒரு சிலர் சரித்திரத்தை உருவாக்குகிறார்கள். பலர் சரித்திரத்தில் இடம் பெறுகிறார்கள். அப்படி சரித்திரத்தில் இடம் பெறுகின்ற விருது பெற்ற அறிஞர்கள் திகழ்கிறார்கள் என்று பெருமையாகச் சொல்லலாம்.

தமிழ் சரித்திரத்தில் இடம் பெறும் விருதாளர்களான உங்கள் அனைவருக்கும் என் உளமார்ந்த வாழ்த்துகளையும், வணக்கங்களையும் நான் தெரிவித்துக் கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழுக்குத் தொண்டு செய்யும் தமிழர்களாய் போற்றி வரும் தமிழ் மொழியை நம்முடைய தாய்மொழியாம் தமிழ் மொழியைப் போற்றுவோம். தமிழ் மொழி வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் உறுதுணையாக இருப்போம். அதே நேரத்தில் தமிழை அகத்தில் மனம் குளிர்வோம் என்று கூறி அனைவரையும் வாழ்த்தி இந்த சிறப்பான நிகழ்ச்சியில் அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்திருக்கக்கூடிய அத்தனை பேருக்கும் துறையின் சார்பில் நானும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியை உரித்தாக்கி தொடர்ந்து உங்களுடைய தமிழ்ப் பணி தொடரவேண்டும் என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி நிறைவு செய்கிறேன்.

இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் திரு.வே.ராஜாராமன் இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஔவை அருள் மற்றும் அறிஞர் பெருமக்கள் முதலானோர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu